பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
**12 03 2026 Thursday 6 30 PM**
மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** நாட்டில், பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

**2)** எரிபொருள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளதால் பொதுமக்கள் அச்சம் கொள்ள வேண்டாம் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

**3)** தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பேற்றுள்ள திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கருக்கு, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**4)** தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

**5)** ருவாண்டா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா — பல்கேரியாவின் **Alexander Donski** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**a.** - இனி விரிவான செய்திகள் - -

<<<<<< >>>>>>>

நாட்டில், பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், வீடுகளுக்கான சமையல் எரிவாயு மற்றும் வாகனங்களுக்கான செறிவூட்டப்பட்ட CNG எரிவாயு தடையின்றி விநியோகிக்கப்படுவதாக கூறினார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பதிவு செய்த இரண்டு நாட்களுக்குள் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

வீட்டு உபயோக சிலிண்டர் விநியோகத்திற்கு அரசு முன்னுரிமை அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எரிவாயு விநியோகத்தை தடையின்றி மேற்கொள்ளும் வகையில், இதன் உள்நாட்டு உற்பத்தியை 28 சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவம் அவர் கூறினார்.

தற்போது 80 சதவீதம் எரிவாயு விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாகவம் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

அமெரிக்கா, நார்வே, ரஷ்யா, நைஜீரியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவப்பணிகளுக்கு தடையின்றி எரிவாயு விநியோகம் நடைபெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவப்பணிகள் பாதிக்கப்பாடமல் இருக்க வணிக ரீதியிலான எல் பி ஜி சிலிண்டர்கள் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு ஹர்தீப் சிங் புரி கூறினார்.

<<<<<< >>>>>>>

எரிபொருள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளதால் பொதுமக்கள் அச்சமோ, பதற்றமோ கொள்ள வேண்டாம் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உணவுத்துறை அமைச்சர் திரு சக்ரபாணி தலைமையில் எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்வது குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்க மத்திய அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாட்டை போக்க மத்திய அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு நாம் துணை நிற்க வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

<<<<<< >>>>>>>

தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பேற்றுள்ள திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கருக்கு, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சென்னை மக்கள் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், தாம் கலந்துகொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

திரு அர்லேக்கரின் பணிகள் சிறப்பாக அமைந்திட தமது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பேற்றுள்ள திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கருக்கு, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைளத பதிவில், அரசியலமைப்பின் அங்கமான இந்த பொறுப்பில் அவரின் பணி சிறக்க வேண்டும் என வாழ்த்துவதாகவும் கூறியுள்ளார்.

<<<<<< >>>>>>>

தூத்துக்குடி மாவட்டம், வேடநத்தம் கிராமத்தில் பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவர் மீதும் திமுக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பிளஸ் டூ வகுப்பு பயின்று வந்த இந்த மாணவி, காணவில்லை என்று பெற்றோர் புகார் அளிக்க வந்தபோதும் காவல்துறை அலட்சியமாக செயல்பட்டதாக கூறியுள்ளார்.

பெண்ணின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் குற்றவாளியை கைது செய்ய வலியுறுத்தி, போராட்டம் நடத்தியபோது குற்றவாளிகளை உடனடியாக கைது செய்வதற்கு பதிலாக அவர்களிடம் திமுக சார்பில் சமாதான பேச்சு நடத்தப்பட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பாலியல் வன்கொடுமையும், பெண்களுக்கு பாதுகாப்பின்மையும் தமிழகத்தில் தின செய்தி ஆகிவிட்டதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தமிழகத்தில் திமுக அரசின் திறன் அற்ற நிர்வாகத்தினால் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சென்னையில் அடுத்தடுத்து மூன்று பாலியல் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திறன் அற்ற அரசு நிர்வாகத்தின் காரணமாக, தமிழகம் பெண்கள் வாழ தகுதியற்ற மாநிலமாக மாறி வருவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் போன்றவை எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

<<<<<< >>>>>>>

தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் குற்றங்கள் குறைந்துள்ளதாக மாநில உள்துறை செயலர் திரு தீரஜ்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு சிறப்பாக உள்ளது என்றும், இதற்காக மாநில அரசு முறையான நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

பொது நிகழ்ச்சிகளில் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய மாநில காவல்துறை தலைவர் திரு வெங்கட்ராமன், பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

போக்சோ வழங்குகள் குறித்து பொது மக்களிடையே அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<<< >>>>>>>

பிரதமரின் சூரியசக்தி மின் திட்டத்தின்கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் **600**-க்கும் மேற்பட்ட வீடுகளின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி தகடுகளை அமைத்து மின்சார உற்பத்தி செய்து வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ், மின் உற்பத்தி செய்ய மானியம் வழங்கப்பட்டு வருவதாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

***(Sound Byte — பயனாளி — 21 Sec.)***

சூரிய மின்சக்தித் திட்ட பயனாளிகள் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யும் மின்சாரத்தை அவர்களிடமிருந்து பெறுவதற்கு **12** முகவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப வல்லுநர் திரு ஸ்ரீதர் தெரிவித்தார்.

***(Sound Byte — ஸ்ரீதர் - 30 Sec. )***

<<<<<< >>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வீடு sகட்டுவதற்கான பணி ஆணைகளை சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு கு. பிச்சாண்டி பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

-------------------

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி நியமிக்கப்பட்டுள்ள தொடர்பு அலுவலர்களுக்கான

ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

-----------------

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் உயிரியல் பூங்காவில் பராமரிப்புப் பணிகள் காரணமாக வரும் 18-ஆம் தேதி முதல் பத்து நாட்களுக்கு சிங்கம் மற்றும் மான்களை பார்வையிட அனுமதியில்லை என்று நிர்வாகம் தெரிவித்துள்ளது.

---------------

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே எருது விடும் விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

---------------

நீலகிரி மாவட்டம் உதகையில் மத்திய மக்கள் தொடர்பகத்தின் சார்பில் மக்கள் நலத்திட்டங்கள் குறித்த சேவை முகாம் நடைபெறறது. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த முகாமில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

------------------

மயிலாடுதுறையில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ஸ்ரீகாந்த் இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<< >>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ருவாண்டாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா — பல்கேரியாவின் **Alexander Donski** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-4, 7-6** என்ற செட் கணக்கில், பிரான்சின் **Florent Bax** — துனிஷியாவின் **Aziz Quakaa** இணையை வென்றது.

---------------

கொல்கத்தா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manish Suresh Kumar, Sanjeev Shanmugam, Karan Singh** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<< End>>>>>>>**